SIVANMANAI

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

## பதிகம்: திருத்தெள்ளேணம்

THIRUVASAGAM GROUP

Scan this QR code using the WhatsApp Camera to join this group


**சிவன்மனை**

**சென்னை-600091**

www.fhyzics.net/sivanmanai

# திருத்தெள்ளேணம்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

திருமாலும் பன்றியாய்ச் சென்றுஉணராத் திருவடியை
உருநாம் அறியஓர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.

திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையும் கண்டதில்லை
அருவாய் உருவமும் ஆயபிரான் அவன்மருவும்
திருவாரூர் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.

அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்துஅன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட்டு உலகமெல்லாம்
சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயம் காத்துஎன்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவம்ஆய செஞ்சுடர் நல்குதலும் நாம்ஒழிந்து
சிவம் ஆனவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

அருமந்த தேவர் அயன்திருமாற்கு அரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்புஎய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்து என்உளம் புகுந்த
திருவந்தவா பாடிக் தெள்ளேணம் கொட்டாமோ.

அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந்து ஆண்டதிறம்
உரையாட உள்ளொளிஆட ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்
திரைஆடுமா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

SIVANMANAI

ஆவா அரிஅயன் இந்திரன் வானோர்க்கு அரியசிவன்
வாவா என்று என்னையும் பூதலத்தே வலித்து
ஆண்டுகொண்டான்
பூவார் அடிச்சுவடு என்தலைமேல் பொறித்தலுமே
தேவானவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

கறங்குஓலை போல்வதுஓர் காயப்பிறப்போடு இறப்புஎன்னும்
அறம்பாவம் என்றுஇரண்டு அச்சம்தவிர்த்து என்னை
ஆண்டுகொண்டான்
மறந்தேயும் தன்கழல்நான் மறவா வண்ணம் நல்கிய அத்
திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.

கல்நார் உரித்துஎன்ன என்னையும்தன் கருணையினால்
பொன்னார் கழல்பணித்து ஆண்டபிரான் புகழ்பாடி
மின்நேர் நுடங்குஇடைச் செந்துவர்வாய் வெண்நகையீர்
தென்னா தென்னாஎன்று தெள்ளேணம் கொட்டாமோ.

கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவேய் அனவளைத் தோளியோடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்து ஆட்கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற் கண்நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ.

கயல்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந்து ஆண்டலுமே
அயல்மாண்டு அருவினைச் சுற்றமும்மாண்டு அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுஉள்ள வாசகமாண்டு என்னுடைய
செயல்மாண்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

முத்திக்கு உழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக்கு அருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி
தித்திக்குமா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

SIVANMANAI

பார்பாடும் பாதாளர்பாடும் விண்ணோர் தம்பாடும்
ஆர்பாடுஞ் சாரா வகைஅருளி ஆண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.

மாலே பிரமனே மற்றுஒழிந்த தேவர்களே
நூலே நுழைவுஅரியான் நுண்ணியனாய் வந்துஅடியேன்
பாலே புகுந்து பரிந்துஉருக்கும் பாவகத்தால்
சேல்ஏர் கண்நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ.

உருகிப் பெருகி உளம்குளிர முகந்துகொண்டு
பருகற்கு இனிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.

புத்தன் புரந்தராதி அயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணம் கொட்டாமோ.

உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடல்உளனாய்க் கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழல்இணைகள் தந்தருளும்
செயலைப் பரவிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.

வான்கெட்டு மாருதம்மாய்ந்து அழல்நீர் மண்கெடினும்
தான்கெட்டல் இன்றிச் சலிப்புஅறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டுஎன் உள்ளமும்போய்
நான்கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

விண்ணோர் முழுமுதல் பாதாளத்தார் வித்து
மண்ணோர் மருந்து அயன்மால்உடைய வைப்படியோம்

SIVANMANAI

கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னா தென்னாஎன்று தெள்ளேணம் கொட்டாமோ.

குலம்பாடிக் கொக்குஇறகும் பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுஉண்டவா பாடி நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி